பருவம் II வகுப்பு 7 கணிதம் – மதிப்பீட்டு வினாக்கள்

இயல் 2 அளவைகள்

1. ஒரு வட்டத்தின் சுற்றளவிற்கும் ஆரத்திற்கும் இடையேயான வித்தியாசம் 37 செ.மீ. எனில், வட்டத்தின் ஆரம் ______
   (1) 30 செ.மீ (2) 37 செ.மீ (3) 7 செ.மீ (4) 14 செ.மீ
2. ஒரு வட்ட வடிவப் பூங்காவைச் சுற்றியுள்ள வேலியின் நீளம் 72 மீ. பூங்காவின் பரப்பளவு யாது?
   (1) 308 $மீ^2$ (2) 91 $மீ^2$ (3) 77 $மீ^2$ (4) 126 $மீ^2$
3. ஒரு வட்டத்தின் ஆரம் இருமடங்காக அதிகரித்தால் அதன் சுற்றளவு _______ அதிகரிக்கும்.
   (1) 3 மடங்கு (2) 4 மடங்கு (3) 2 மடங்கு (4) 6 மடங்கு
4. ஒரு வட்டத்தின் பரப்பளவு 154 $செ.மீ^2$ எனில் ஆரம் _______
   (1) 14 செ.மீ (2) 7 செ.மீ (3) 15 செ.மீ (4) 8 செ.மீ
5. ஒரு வட்டத்தின் சுற்றளவு $42\pi$ செ.மீ எனில், அதன் பரப்பளவு _______
   (1) 1836 $செ.மீ^2$ (2) 1386 $செ.மீ^2$ (3) 1683 $செ.மீ^2$ (4) 1368 $செ.மீ^2$
6. இரு வட்டங்களின் ஆரங்களுக்கிடையேயான விகிதம் 1:3 எனில், அவற்றின் பரப்புகளுக்கிடையேயான விகிதம் _______ ஆகும்.
   (1) 1:3 (2) 3:1 (3) 9:1 (4) 1:9
7. 120 மீ×33 மீ அளவுள்ள ஒரு செவ்வக வடிவ வயலைச் சுற்றி உட்புறமாக 3 மீ அகலத்தில் பாதை அமைக்கப்பட்டுள்ளது எனில், அப்பாதையின் பரப்பளவு _______
   (1) 3960 $மீ^2$ (2) 456 $மீ^2$ (3) 450 $மீ^2$ (4) 540 $மீ^2$
8. 60×40 அடி அளவுள்ள மனையின் குறுக்கு நெடுக்காக 5 அடி அகலத்தில் பாதை அமைக்கப்பட்டுள்ளது. பாதை நீங்கலாக மனையின் பரப்பளவு யாது?
   (1) 2400 ச. அடி (2) 475 ச. அடி (3)1925 ச. அடி (4) 2875 ச. அடி
9. வட்ட வடிவத் தோட்டத்தின் ஆரம் 9 மீ. அதைச் சுற்றிலும் வெளிப்புறமாக 3.5 மீ அகலத்தில் பாதை அமைக்கப்பட்டுள்ளது எனில், பாதையின் பரப்பளவு யாது?
   (1) 236.5 $மீ^2$ (2) 263.5 $மீ^2$ (3) 235.6 $மீ^2$ (4) 237.5 $மீ^2$
10. ஒரு வட்ட வடிவப் பூங்காவின் ஆரம் 21.5 மீ. உட்புறத்தில் 2 மீ அகலப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. பாதை நீங்கலாக பூங்காவின் ஆரம் யாது?
    (1) 21.5 மீ (2) 23.5 மீ (3) 12.5 மீ (4) 19.5 மீ

**சரியா / தவறா**

11. வட்டம் ஒரு மூடிய வடிவமாதலால் ஒரு பலகோணம் ஆகும்.
12. $p$ -ன் மதிப்பு 3.141592
13. ஆரத்தின் இருமடங்கு விட்டமாகும்.
14. $C = 2pr$ அலகுகள் என்ற சூத்திரத்தில் $r$ என்பது விட்டமாகும்.
15. ஒரு வட்டத்தில் சுற்றளவிற்கும் விட்டத்திற்கும் இடையேயான விகிதம் ஒரு மாறிலி ஆகும்.

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

16. 3.5 மி.மீ ஆரமுள்ள வட்டத்தின் பரப்பளவு ________
17. ஒரு மிதிவண்டிச் சக்கரத்தின் விட்டம் 20 அங்குலம் எனில் அதன் சுற்றளவு ________ ஆகும்.
18. ஒரு வட்டத்தின் விட்டம் 4 செ.மீ எனில், அதன் பரப்பளவு ________ ஆகும்.
19. ஒரு வட்டத்தின் சுற்றளவு 22 மீ எனில், அதன் விட்டம் ________ ஆகும்.
20. 23 செ.மீ நீளமும், 20 செ.மீ அகலமும் உள்ள ஒரு செவ்வக வடிவத் தகட்டிலிருந்து 15 செ.மீ பக்கமுள்ள சதுரம் வெட்டியெடுக்கப்படுகிறது எனில், மீதமுள்ள தகட்டின் பரப்பளவு ________ ஆகும்.

LIVEWORKSHEETS